மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM தேසියම්

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 81 | 13.06.2023 (செவ்வாய்க்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 7 | ஊக்குவிப்பு : ரூ.30.00

# அனைத்துலக சுயநிர்ணய சட்டத்தின் கீழ்
# தமிழருக்கான தீர்வு :
## சம்பந்தனின் சீற்றத்தால் ஆடிப்போன ராஜபக்ச அதிகார மையம்



இலங்கை தமிழரசுக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா அதிபர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையில் கடந்த வாரம் இடம்பெற்ற பேச்சுக்களின் போது, வழக்கத்துக்கு மாறாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தனது 90 ஆவது வயதில் அசாதாரணமாக சீற்றமடைந்தமை உற்று நோக்கப்படுகிறது.

பக்கம் 5

## எனது பிள்ளையை என்னிடம் அனுப்பி வையுங்கள்!
## சாந்தனின் தாயார் விடுத்துள்ள கோரிக்கை




பக்கம் 5

இந்திய சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள சாந்தனை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் சாந்தனின் தாயார் கண்ணீர் மல்க உருக்கமாக கோரிக்கை விடுத்துள்ளார்.

## தொல்பொருள் பாதுகாப்பு செயலணிக்கு அரசாங்கத்தின் காணியையோ அல்லது
# தனியாரின் காணியையோ
## ஆக்கிரமிக்க முடியாது! : ஜனாதிபதி காட்டம்!!

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். அதற்காக ஒரு விகாரைக்கு 220 ஏக்கர் நிலப்பரப்பு உரித்துடையதாகக் காணப்படும் என்று நான் நினைக்கவில்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். கடந்த வாரம் ஜனாதிபதி செயலகத்தில் காணி பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பொறிமுறைகள் தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது “முல்லைத்தீவு மாவட்டத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ்



பக்கம் 5

## தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள்! பகிரங்கமாக
## மிரட்டல் விடுக்கும் சரத் வீரசேகர

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உணர்ச்சி வசப்படாமல் அமைதியாக இருக்க வேண்டும். இல்லையேல் சிறையில் அடைக்கப்படுவார்கள் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மிரட்டல் விடுத்துள்ளார்.

பக்கம் 5

## நாட்டில் இனவாத : மதவாத மோதல்கள்
### மீண்டும் உருவெடுக்குமா..! சந்தேகத்தை வெளிப்படுத்திய பந்துல



பக்கம் 5

இனவாதத்தையும், மதவாதத்தையும் தூண்டும் வகையில் மக்களில் ஒரு பகுதியினர் மட்டுமல்ல, மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களும் செயற்படுகின்றனர் என அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். நாட்டில் இனவாத, மதவாத மோதல்கள் மீண்டும் உருவெடுக்குமா என்ற சந்தேகம் இதனால் எழுந்துள்ளது எனவும் அவர்

தேசியம்
THESIYAM

# நிர்வாக சேவை அதிகாரிகளும், பொதுமக்களும் திரண்டு வாழ்த்திய "மன்சூர் எனும் நிர்வாக ஆளுமை" கௌரவிப்பு நிகழ்வு !



கிழக்கு மாகாணம் சம்மாந்துறையைச் சேர்ந்த கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) தேசமாண்ய ஆதம்பாவா மன்சூர் அவர்களின் 39 வருட கால அரச சேவையை பாராட்டி கௌரவிக்கும் விழாவும், அவர் பற்றிய "மன்சூர் எனும் நிருவாக ஆளுமை" நூல் வெளியீடும் ஞாயிற்றுக்கிழமை (11) மாலை சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் அதிக மக்கள் வெள்ளத்தின் மத்தியில் அரச உயர திகாரிகளின் பங்குபற்றலுடன் மிகப்பிரமாண்டமாக நடைபெற்றது.

சம்மாந்துறை சாதனையாளர்களை வாழ்த்தும் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அவ்வொன்றிய தலைவரும், நிர்வாக கிராம நிலதாரியுமான எம்.எல். தாஸீம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவுக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி அல்ஹாபிழ் என்.எம். அப்துல்லாஹ், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாச்சார பீடாதிபதி அரசியத்துறை பேராசிரியர் எம்.எம். பாஸில், கிழக்கு மாகாண பேரவைச் செயலாளர் எம்.எம். நஸீர், கிழக்கு மாகாண பொதுசேவை ஆணைக்குழு செயலாளர் எம்.கோபாலரத்னம், கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணி) திருமதி ஆர்.யூ.ஏ.ஜலீல், இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளரும், எல்லை நிர்ணய குழு உறுப்பினருமான எம்.ஐ.எம். அமீர், முன்னாள் வவுனியா அரசாங்க அதிபர் ஐ.எம்.ஹனீபா, இலங்கை பொதுச்சேவை ஆணைக்குழு முன்னாள் உறுப்பினரும், அமைச்சின் மேலதிக செயலாளருமான ஏ.எல்.எம். சலீம், ஓய்வுபெற்ற கிழக்கு மாகாண சுகாதார அமைச்சி செயலாளர் ஏ.எச்.எம். அன்ஸார், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ.எம். வாஜித், கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளருமான ஐ.எல்.எம். மாஹிர், உட்பட அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், மாகாண திணைக்களங்களின் பணிப்பாளர்கள் மற்றும் திணைக்கள தலைவர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், வைத்தியர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பல உயர் அதிகாரிகள், கல்விமான்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் அடங்களாக நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் அதிதிகளினால் கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் தேசமாண்ய ஆதம்வாவா மன்சூர் அவர்களின் 39 வருட கால அரச சேவையை பாராட்டி உரையாற்றியதுடன் அம்பாறை மாவட்ட பல்வேறு சிவில் அமைப்புகளும், முக்கியஸ்தர்களும், சம்மாந்துறை பொது அமைப்புக்களும் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவித்தனர். இந்நிகழ்வில் முக்கியஸ்தர்கள் பலரின் செய்தி அடங்கிய கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் ஆதம்பாவா மன்சூர் அவர்களின் 39 வருட கால அரச சேவையை பாராட்டிய ஆசிச்செய்திகளை கொண்ட "மன்சூர் எனும் நிர்வாக ஆளுமை" எனும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பினால் CSMWA பேரவைக்கு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிப்பு.!



பல்வேறு மக்கள் நலன்சார் சேவைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்ற கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பிற்கு என்றும் உறுதுணையாக இருந்து வருகின்ற CSMWA பேரவையினை கௌரவிக்கும் நிகழ்வு (10) கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்றது.

CSMWA பேரவையின் தலைவி ஃபிரோஸா காஸிம் இலங்கை வந்திருந்தபோதே இந்நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பின் ஸ்தாபகரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும், முன்னாள் கல்முனை மாநகர பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூர் அவர்களினால் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு YWMA பேரவையின் தலைவி திருமதி. ஃபவாஸா தாஹா உட்பட அதன் உயர் நிருவாக உறுப்பினர்களும், YMMA பேரவையின் முன்னாள் தலைவர் தேசமானிய காலித் எம்.பாறுக், கனடாவில் வசிக்கும் பிரபல தொழிலதிபரும் சமூக சேவையாளருமான முஹம்மது அஸார் அவர்களும், மற்றும் "கொழும்பு டைம்ஸ்" பத்திரிகை தலைமை பதிப்பாசிரியர் முஹம்மது ரஸூல்டீன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வைத்தியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான இருநாள் திறன் மேம்பாட்டுப் பயிற்சிப் பட்டறை !



சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி அசேல குணவர்த்தன மற்றும் சுகாதார அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் கல்முனை சுகாதாரப்பிராந்தியத்தில் கடமையாற்றும் தெரிவு செய்யப்பட்ட வைத்தியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான இருநாள் திறன் மேம்பாட்டுப் பயிற்சிப் பட்டறையின் இரண்டாம் நாளான ஞாயிறுக்கிழமை துறைசார் நிபுணர்கள் மற்றும் வைத்திய நிபுணர்களின் பங்குபற்றுதலுடன் பல்வேறு விரிவுரைகள் இடம்பெற்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ எல் எம் றிபாஸ் அவர்களின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம் மாஹிர் அவர்களினால் இணைப்புச் செய்யப்பட்ட இப்பயிற்சி நெறியில் வைத்திய உத்தியோகத்தர்களும் தாதிய உத்தியோகத்தர்களும் ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தார்கள்.

நிகழ்வின் இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ வாஜித் அவர்கள் கலந்து கொண்டு பணிப்பாளர் சார்பான உரையை நிகழ்த்தியதுடன் பயிற்சி நெறியில் கலந்து கொண்ட பங்குபற்றுநர்களிடம் பயிற்சி நெறி தொடர்பிலான விளக்கங்களையும் கேட்டறிந்தார்.

# உள்ளூராட்சி மன்றங்களின் நடவடிக்கைக்கு அம்பாறை மாவட்ட உலமா சபை பாராட்டு

جمعية علماء سريلانكا - فرع منطقة امبارى
සමස්ත ලංකා ජම්ඉයියතුල් උලමා - අම්පාර දිස්ත්‍රික්ක ශාඛාව
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா - அம்பாறை மாவட்டக் கிளை
ALL CEYLON JAMIYYATHUL ULAMA - AMPARA DISTRICT BRANCH

இம்முறை க.பொ.த. சாதாரண தர பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான க.பொ.த. உயர்தர டியூசன் வகுப்புகளை உடனடியாக ஆரம்பிக்காமல், 30 ஆம் திகதி வரை தாமதப்படுத்துவதற்கு கல்முனை மற்றும் அக்கரைப்பற்று மாநகர சபைகள் உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்கள் மேற்கொண்ட நடவடிக்கையை அம்பாறை மாவட்ட ஜம்மியத்துல் உலமா சபை வரவேற்றுள்ளதுடன் பாராட்டும் தெரிவித்துள்ளது.

உலமா சபையின் செயற்குழுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (11) பாலமுனை ஸஹ்வா அரபுக் கல்லூரியில் அதன் தலைவர் அஷ்ஷெய்க் ஐ.எல்.எம். ஹாஷிம் தலைமையில் இடம்பெற்றபோது இவ்வாறு பாராட்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அதன் செயலாளர் அஷ்ஷெய்க் ஏ.எல்.நாசிர்கனி தெரிவித்தார்.

மாணவர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு உள்ளூராட்சி மன்றங்கள் மிகவும் கரிசனையுடன் விடுத்திருக்கின்ற அறிவுறுத்தல்களை தனியார் கல்வி நிலையங்கள் ஏற்று, செயற்பட வேண்டும் எனவும் இது விடயத்தில் அனைத்து தாப்பினரும் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்க முன்வர வேண்டும் எனவும் அம்பாறை மாவட்ட உலமா சபை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

அதேவேளை இக்கால சூழலில் க.பொ.த. சாதாரண தர பரீட்சை எழுதிய மாணவர்களை ஆத்மீக ரீதியில் நெறிப்படுத்துவதற்கான செயற்பாடுகளை உலமா சபையின் கிளைகள், பள்ளிவாசல் நிர்வாகங்கள், தஃவா அமைப்புகள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்கள் முன்னெடுக்க வேண்டும் என மாவட்ட உலமா சபை வலியுறுத்துவதாகவும் அதற்கான வழிகாட்டல்களை வழங்குவதற்கு மாவட்ட உலமா சபை தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மழை வேண்டி குனூத் ஓதுமாறு அம்பாறை மாவட்ட உலமா சபை வேண்டுகோள்

جمعية علماء سريلانكا - فرع منطقة امبارى
සමස්ත ලංකා ජම්ඉයියතුල් උලමා - අම්පාර දිස්ත්‍රික්ක ශාඛාව
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா - அம்பாறை மாவட்டக் கிளை
ALL CEYLON JAMIYYATHUL ULAMA - AMPARA DISTRICT BRANCH

மக்களால் தாங்கிக் கொள்ள முடியாதளவில் நீடித்துச் செல்கின்ற அதிகூடிய வெப்பம் நிறைந்த காலநிலையை தணிப்பதற்காக மழை பொழிய வேண்டி ஐவேளைத் தொழுகைகளிலும் குனூத் ஓதுமாறு அம்பாறை மாவட்ட ஜம்மியத்துல் உலமா சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (11) பாலமுனை ஸஹ்வா அரபுக் கல்லூரியில் மேற்படி உலமா சபையின் தலைவர் ஐ.எல்.எம். ஹாஷிம் மௌலவி தலைமையில் இடம்பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைவாக இவ்வேண்டுகோள் விடுக்கப்படுவதாக அதன் செயலாளர் ஏ.எல்.நாசிர்கனி மௌலவி தெரிவித்தார்.

இதன்படி எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிவாசல்களிலும் ஐவேளைத் தொழுகைகளிலும் குனூத் அந்நாஸிலாவை ஓதுமாறு பள்ளிவாசல்களின் நிர்வாகிகளும் இமாம்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும், வெள்ளிக்கிழமை குத்பாவில் மழை வேண்டி விஷேடமாக பிரார்த்திக்குமாறும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில் மழை வேண்டி தொழுகை நடத்துமாறும் அம்பாறை மாவட்ட உலமா சபை வேண்டுகோள் விடுப்பதாக செயலாளர் ஏ.எல்.நாசிர்கனி தெரிவித்தார்.

## அல் : அர்ஷத் விஷேட பிரிவுக்கு இரு சக்கர நாற்காலிகள் அன்பளிப்பு



கிழக்கு ஷோசியோ அபிவிருத்தி அமைப்பின் வேண்டுகோளின் பேரில் பிரன்ஷிப் அமைப்பின் தலைவர் ரிகாஷ் ஹாஜியின் அனுசரணையில் சம்மாந்துறை அல்-அர்ஷத் மகா வித்தியாலயத்தின் விஷேட தேவையுடைய மாணவர் பிரிவுக்கு இரு சக்கர நாற்காலிகள் இரண்டு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர் எம்.ஏ.றஹீம் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (11) இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு ஷோசியோ அபிவிருத்தி அமைப்பின் தலைவர் வாஹிதா முகைதீன் இம்தியாஸ், தவிசாளர் இம்தியாஸ் காரியப்பர் மற்றும் ரிகாஷ் ஹாஜி ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டு இவற்றை வழங்கி வைத்தனர்.

இதில் பாடசாலையின் பிரதி அதிபர் எம்.ஏ.எம். சிராஜ், உதவி அதிபர் யூ.எல். நூஹல்லாஹ், விஷேட பிரிவின் தலைவர் எம்.ஐ.றியாத் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

## வவுனியா சமயபுரம் கிராமத்தில் மாடுகளை திருட முயன்ற நபர்களை

### மடக்கிப்பிடித்த பொதுமக்கள் : சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் ஒப்படைப்பு



வவுனியா சமயபுரம் கிராமத்தில் மாடுகளை திருட முயன்ற இரு நபர்களை மடக்கிப்பிடித்த பொதுமக்கள் குறித்த இரு நபர்களையும் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் ஒப்படைப்படைத்தனர்.

குறித்த பகுதியில் நேற்று (12.06.2023) காலை 6.00 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,
வவுனியா நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமயபுரம் கிராமத்தில் கடந்த சில மாதங்களாக கால்நடைகள் திருடப்படுகின்றமை அதிகரித்த வண்ணமே காணப்பட்டதுடன் கால்நடைகளை களவாடுபவர்கள் பொதுமக்களினால் கையும் களவுமாக பிடிபட்டு நெளுக்குளம் பொலிஸ் நிலையத்திலும் கையளித்துள்ளனர். எனினும் அப்பகுதியில் கால்நடைகள் களவாடப்படுகின்றமை தொடர்ந்த வண்ணமேயிருந்தது.

இந்நிலையில் நேற்று (12.06.2023) காலை 6.00 மணியளவில் சமயபுரம் விநாயகர் வித்தியாலய வீதியில் மாட்டினை களவாட முயன்ற இரு நபர்களை பொதுமக்கள் நையப்புடைத்து வாகனம் ஒன்றில் கட்டி வைத்தமையுடன் அவர்களை நெளுக்குளம் பொலிஸ் நிலைய பொலிஸாரிடம் வழங்குவதற்கு பொதுமக்கள் மறுப்பு தெரிவித்திருந்தமையுடன் மாட்டினை களவாட முயன்ற இரு நபர்களையும் வாகனத்தில் ஏற்றி வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் ஒப்படைத்தனர்.

இவ்விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாதிக்கப்பட்ட மக்கள் , எமது கிராமத்தில் கால்நடைகள் களவாடப்படுகின்றமை தொடர்ந்த வண்ணமேயுள்ளது இதனால் எமது வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ளமையுடன் இரவில் நிம்மதியாக உறங்குவதற்கு கூட முடியவில்லை . பல தடவைகள் கால்நடைகளை களவாடுகளை பிடித்துக்கொடுத்தும் நெளுக்குளம் பொலிஸார் எவ்வித நடவடிக்கையினையும் மேற்கொள்ளவில்லை என்பதினால் நாங்கள் இந் தடவை திருடர்களை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் ஒப்படைப்படைத்துள்ளோம் என தெரிவித்தனர்.

## நிந்தவூர் சுகாதார பிரிவில் வர்த்தக நிலையங்கள், பழக்கடைகள், உணவகங்கள், வெற்றுக் காணிகள், அனைத்திலும் திடீர் சோதனை.








நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல்.எம். றயீஸ் அவர்களின் வழிகாட்டலில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் உள்ள வர்த்தக நிலையங்கள், பழக்கடைகள், சில்லறைக் கடைகள், ஹோட்டல், வெற்றுக் காணிகள், அனைத்திலும் திடீர் சோதனைகள் இன்று இடம்பெற்றது.

இந்தகளச்சோதனையின் போது ஒவ்வொரு கர்ப்பிணித்தாய்க்கும் போசாக்கு மிக்க உணவுகளை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 45000/- பெறுமதியான கொடுப்பனவைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்ய அனுமதியளிக்கப்பட்ட வியாபார நிலையங்களில் அரிசி, பருப்பு, கச்சான்(தோல் நீக்கியது), ரின் மீன், கடலை, சோயா, முட்டை, பாசிப்பயறு, நெத்தலிக்கருவாடு என்பன உள்ளதா என்றும், அவற்றின் தரம், இவை தவிந்த ஏனைய பொருட்கள் விற்கப் படக்கூடாது என்று கடை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு அவ்வாறு அவற்றை மீறுகின்ற கடைகளிட்கும், தாய்மார்களிற்கும் எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டது.

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவுக்குட்பட்ட வியாபார நிலையங்கள், ஹோட்டல்கள் மற்றும் பழக்கடைகளின் தரத்தைப்பேணும் வகையிலும் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் அனைத்து இடங்களிலும் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் மக்களின் நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுகள், பழங்கள் மற்றும் செயற்கையாக பழங்களை பழுக்கவைப்பதற்காக பயன்படுத்தகூடிய இரசாயனங்கள், இரசாயனம் தெளிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய கருவிகள் அனைத்தும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

இப்பரிசோதனை நடவடிக்கையில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல்.எம் றயீஸ், மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், மற்றும் அலுவலக ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

## திருமலையில் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவி கௌரவிப்பு..!



திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஏற்பாட்டில் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்த தி ஃஸ்ரீ சண்முகா இந்து மகளீர் கல்லூரி மாணவி உ.அபிநயா நேற்று (12) திருகோணமலை மாவட்ட செயலகத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டார்.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையிலும் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் ஒருங்கிணைப்பிலும் உ.அபிநயா அவர்களுக்கு மேலதிக பிரதிலாபக் கொடுப்பனவாக ரூபா 25,000 பெறுமதியான காசோலை வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அந்த வகையில் இவ்வேலைத்திட்டமும் ஒன்றாகும்.

இந்நிகழ்வில் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் மாவட்ட இணைப்பதிகாரி பா.சஜிக்கா மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர் எஸ்.புவகிதன் கலந்து கொண்டனர்.

## மட்டக்களப்பு மாங்காட்டில் நஞ்சு மீன் சாப்பிட்டு மகள் உயிரிழந்த நிலையில் தாயார் சிகிச்சை பலனின்றி 3 நாளில் உயிரிழப்பு

மட்டக்களப்பு மாங்காட்டில் நச்சுத்தன்மை கொண்ட மீனை உண்டு ஒருவர் உயிரிழந்ததுடன் 3 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த 54 வயதுடைய பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக்கிழமை (11) இரவு உயிரிழந்துள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிசார் தெரிவித்தனர்.

மாங்காடு கட்டுப் பிள்ளையார் வீதியைச் சேர்ந்த 54 வயதுடைய தில்லையம்பலம் யூசைமலர் என்பவரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.
குறித்த பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றின் உரிமையாளர் கடந்த வியாழக்கிழமை (08) மதிய உணவிற்காக அந்த பகுதியிலுள்ள கடற்கரையில் மீன்வாங்க சென்ற நிலையில் அங்கு மீன் முடிந்த நிலையில் குடும்பத்தைச் மீனவர்களின் வலையில் சிக்கிய நச்சு தன்மை கொண்ட மீனை அங்கு மீனவர்கள் விட்டுச் சென்ற நிலையில் அதனை எடுத்துவந்து சமைத்து சாப்பிட்ட ஒரு மணித்தியாலயத்தில் நிலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 27 வயதுடைய தில்லையம்பலம் புஜேந்தினி, அவரது 3 வயதுடைய மகன் அஸ்வின், அவரது தாயாரான யூசைமலர், சகோதரன் 20 வயதுடைய கிறிஸ்ரின் ஆகியோர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

இந்த நிலையில் 27 வயதுடைய தில்லையம்பலம் புஜேந்தினி உயிரிழந்ததுடன் அவரது மகன் சகோதரன் சிகிச்சை பெற்று வெளியேறிய நிலையில் அவரது தாயார் தொடர்ந்தும் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர்.



# கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை கிழக்கு ஆளுநரால் திறப்பு!

## முதல் நாளிலே வரலாறு காணாதளவு ஆயிரக்கணக்கான யாத்திரைகள் பங்கேற்பு!!



வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடி வேல் விழா உற்சவத்தையொட்டிய கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை நேற்று (12) திங்கட்கிழமை காலை 7 மணியளவில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் திறந்து வைத்துள்ளார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அனிருத்தனின் ஆலோசனைக்கமைவாக மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி ஆகியோரின் ஏற்பாட்டில் இடம்டிபற்ற காட்டுப் பாதை திறப்பில் கிழக்கு மாகாண ஆளுறர் செந்தில் தொண்டமான், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜெ.என்.டக்ளஸ், மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், லாகுகலை பிரதேச செயலாளர் என்.நவநீதராஜா, மொனராகலை மாவட்ட அரசாங்க அதிபர், ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க உள்ளிட்ட யாத்தியர்கள் பல அன்பர்கள் கலந்து கொண்டனர்.

இதனையடுத்து காலை 5.30 மணிக்கு உகந்தை மலை முருகன் ஆலயத்தில் பிரதம குரு சிவசிறி க.கு. சீதாராம் குருக்கள் விசேட பூஜை நடாத்தி ஆசியுரை வழங்கியதை தொடர்ந்து காலை 7 மணியளவில் காட்டுப் பாதையை கிழக்கு மாகாண ஆளுநர் சம்பிராய பூர்வமாக திறந்து வைத்ததையடுத்து முதல்நாளிலே வரலாறு காணதளவிற்கு 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் யாத்திரையை ஆரம்பித்தனர்.

கதிர்காமத்திற்கான பாதையாத்திரை வடக்கே யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து கடந்த மாதம் 6 ம்திகதி ஜயாவேல்சாமி தலைமையிலான மிகநீண்ட பாதயாத்திரை அடியார்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான அடியார்கள் ஆரம்பித்து சனிக்கிழமை உகந்தையை சென்றடைந்த நிலையில் நேற்று அங்கிருந்து கதிர்காமத்துக்கான 56 மையில் தூரம் கொண்ட காட்டுப் பாதையை ஆரம்பித்தனர்

இந்த காட்டுபாதை உகந்தையிலிருந்து ஐந்து மைல்தூரத்தில் வாகூரவட்டை .பின்பு 7 மைல் தூரத்தில் குமுக்கனாறு 12 மைல் தூரத்தில் நாவலடி. பின்னர் 11 மைல் தூரத்தில் வியாழை. 6 மைல் தூரத்தில் வள்ளி அம்மன் ஆறு. 8 மைல் தூரத்தில் கட்டகாமம். அடுத்து 8 மைல் கதிர்காமம் வரையிலான 56 மைல்களை சுமார் 6 நாட்கள் பாதயைத்திரையை மேற்கொண்டு எதிர்வரும் 19 ம் திகதி கதிர்காம கொடியேற்ற தினத்தை சென்றடைவார்கள்..

இருந்தபோதும் இந்த வருடம் காட்டுப்பாதையூடாக சுமார் 45 ஆயிரம் பக்தர்கள் பாதயாத்திரையை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிற நிலையில் முதல் நாளிலேயே சுமார் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட பாதயாத்திரீகர்கள் பயணித்துள்ளனர்.

இதுவேளை நேற்று திறக்கப்பட்ட காட்டுப்பாதை இம் மாதம் 25 ஆம் தேதி மூடப்படும் என்பதுடன் கதிர்காம கொடியேற்றம் எதிர்வரும்19 ஆம் திகதி நடைபெற உள்ளதுடன் யூலை மாதம் 04ஆம் திகதி தீர்த்தம் இடம் பெறும் என்பதுடன் கதிர்காமப் பாதயாத்திரை அகத்திய முனிவர் தொடக்கி அருணகிரியார் ஈறாகவும், யோகர் சுவாமி முதற் கொண்டு சித்தானைக்குட்டி வரை எண்ணிறைந்த சித்தர் பெருமக்கள் இன்றுவரை தம் பாதக் கமலங்களை பதித்து பவனி சென்ற பாதையில் வருடாவருடம் நாமும் பயணிக்கின்றோம் என "ஷேத்திராடனம்" எனும் நூலில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

## அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கல்முனை தமிழ் கலாச்சார பேரவை விடயம் தொடர்பில் சாதக சமிக்ஞை!!



அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்றைய தினம் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் டபிள்யு.டி. வீரசிங்க தலைமையில் அம்பாறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அரசியல் பிரமுகர்கள், மாவட்ட அரசாங்க அதிபர், அரச உயர் அதிகாரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்தி விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டு அபிவிருத்திக் குழுவினால் அனுமதிகளும் வழங்கப்பட்டிருந்தன.

இக்கூட்டத்தில் மிக முக்கிய விடயமாக கல்முனை தமிழ் கலாச்சாரப் பேரவை குறித்தும் அதற்கு சட்டரீதியாக வழங்கப்பட்ட காணிக்குள் மண் நிரப்புவதற்கு கல்முனை பிரதேச செயலாளர் மறுப்புத் தெரிவித்து வருகின்ற விடயம் தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் அவர்களால் சுட்டிக் காட்டப்பட்டு அதற்கான அனுமதியும் கோரப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் கல்முனை பிரதேச செயலாளர் தெரிவிக்கையில், கல்முனை வடக்குப் பிரதேச செயலக விடயம் தொடர்பிலான வழக்கு தற்போது உச்ச நீதிமன்றத்தில் நடைபெறுவதால் இதற்கான அனுமதி மறுக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் தெரிவிக்கையில் கல்முனை தமிழ் மக்கள் அரசியல் ரீதியாகவும், நிருவாக ரீதியாகவும் அடக்குமுறை பலவற்றிற்குள் அரசியல்வாதிகளாலும், அரச அதிகாரிகளாலும் உள்ளாக்கப்பட்டு வருகின்றார்கள். இதற்கு முன்பும் பல்வேறு விடயங்கள் இவ்வாறு இடம் பெற்று வந்திருக்கின்றன. தற்போது கல்முனை தமிழ் கலாச்சாரப் பேரவையின் காணிக்கு மண் இட்டு நிரப்பும் விடயத்தில் இவ் அடக்குமுறை கையாளப்பட்டு அக்காணி நிரப்புவதற்கான அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றது.

இதன் போது குறுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் அவர்கள் கல்முனை கலாச்சாரப் பேரவைக்கு காணி இல்லை எனவும், இல்லாத காணிக்கு எவ்வாறு மண் இட்டு நிரப்புவதற்கு அனுமதி கொடுக்க முடியும் என்றும், அவ்வாறு அனுமதி கொடுக்கப் படக் கூடாது என்றும், நிரப்ப முடியாது என்றும் தெரிவித்தார்.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கல்முனை தமிழ் கலாச்சாரப் பேரவைக்கு காணி வழங்கப்பட்டுள்ள விடயம் தொடர்பில் அரச நிருவாக ரீதியான சகல ஆவனங்களையும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் பார்வைக்குச் சமர்ப்பித்திருந்தார்.

இவை தொடர்பில் ஆராய்ந்த கிழக்கு மாகாண ஆளுநர் தற்போது கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் இயங்கிக் கொண்டிருக்கும் பொழுது கல்முனை தமிழ் கலாச்சாரப் பேரவைக்கு வழங்கப்பட்டிருக்கின்ற காணிக்கு மண் இட்டு நிரப்புவதற்கான அனுமதியைக் கொடுக்க முடியும் எனவும், இவ்விடயத்திற்கு விரைவாக ஒரு தீர்வைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசனிடம் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் போக்குவரத்தின்மையால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள்..! திலீபன் எம்.பி நடவடிக்கை..!



வவுனியா சின்னத்தம்பனை, மடுக்குளம், வேலன்குளம், கந்தன்குளம், புலவநாவூர், ஆகிய கிராமங்களை சேர்ந்த பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு செல்ல சீரான போக்குவரத்து வசதி இன்மையால் சரியான நேரத்திற்கு பாடசாலை செல்வதில்லை எனவும் பூவரசங்கும் பாடசாலை அதிபரும், குறித்த கிராம மக்களும் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான குலசிங்கம் திலீபனிடம் தெரிவித்ததையடுத்தே போக்குவரத்திற்கான தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரச்சினையை இலங்கை போக்குவரத்து சபை அதிகாரிகளிடம் தெரிவித்து நேற்றையதினம் குறித்த கிராமங்களுக்கான போக்குவரத்து சேவையினை மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் திலீபன், வவுனியா சாலை முகாமையாளர் உளுக்குளம், வடபிராந்திய பாதுகாப்பு முகாமையாளர் சுரேந்தர் இணைந்து ஆரம்பித்து வைத்திருந்தனர்.

## முதலாவது பெண் வைத்தியர்..! கிளிநொச்சி கனிஷ்ட கல்லூரிக்கு பெருமை சேர்த்த மாணவி..!



கிளிநொச்சி கனிஷ்ட கல்லூரியானது கடந்த யுத்த காலத்தின் மிகவும் விரும்பத்தகாத நினைவுகளைக் கொண்ட பாடசாலையாகக் காணப்பட்டது.

இந்நிலையில், கிளிநொச்சி கனிஷ்ட கல்லூரியில் கல்வி கற்று மாணவி ஒருவர் அந்தப் பாடசாலையின் முதல் பெண் மருத்துவராக பதவி நிலையை அடைந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை ஹர்ஷி என்ற இந்தப் பெண் தனது வைத்திய தொழிலை ஆரம்பித்துள்ளார் என்ற செய்தி தற்போது ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

## தொல்பொருள் பாதுகாப்பு...

காணப்படும் 229 ஏக்கர் காணியை விடுப்பதற்கான கடிதத்தை ஜூன் 31ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதாக தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உறுதியளித்திருந்தார்.

எனினும் இதுவரையில் அதற்கான பதில் வழங்கப்படவில்லை." என ஜனாதிபதி சுட்டிக் காட்டினார். இவற்றை கருத்திற்கொண்டு கலந்துரையாடலில் காணி பிரச்சினை குறித்து கருத்து தெரிவித்த ஜனாதிபதி,

"தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் வரலாற்றை முழுமையாக அறிந்து கொள்ளாமல் செயற்படுகின்றார்கள். இந்த விடயத்தில் நீங்கள் எனக்கு வரலாறு கற்பிக்க முயற்சிக்கிறீர்களா? அல்லது நான் உங்களுக்கு வரலாற்று கற்பிக்க வேண்டுமென விரும்புகிறீர்களா? "" என கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்கு பதிலளித்த பணிப்பாளர் நாயகம், "எனக்கு அதனை விடுவிப்பதில் பாரிய சிக்கல் காணப்படுகிறது."" என தெரிவித்தார்.

எனினும் அது அமைச்சரவையின் கொள்கைகளின் பிரகாரம் அமைந்துள்ளது. அதனை தொல்பொருள் திணைக்களம் பின்பற்ற வேண்டும் என்றும் ஜனாதிபதி கடுந்தொனியில் தெரிவித்ததோடு, அடுத்த முறை இவ்வாறு தேசிய கொள்கையை பின்பற்றாமைக்கு காரணங்களை முன்வைத்துக் கொண்டிருக்கக் கூடாது என்றும் ஜனாதிபதி எச்சரித்தார்.

மேலும், விகாரையொன்றை அமைப்பதற்கு 220 ஏக்கர் நிலப்பரப்பை எடுத்தால் அது மகா விகாரையை விடவும் பெரியதாகிவிடும். மகா விகாரை, தியதவனாராமய மற்றும் அபய கிரி உள்ளிட்ட அனைத்து விகாரைகளை இணைத்தால் 100 ஏக்கர் நிலப்பரப்பே காணப்படும்.

அவ்வாறெனில் இவற்றை விட பாரிய விகாரையை அமைப்பதற்காகவா நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்? வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும்.

அதற்காக ஒரு விகாரைக்கு 220 ஏக்கர் நிலப்பரப்பு உரித்துடையதாகக் காணப்படும் என்று நான் நினைக்கவில்லை. விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாடி இது தொடர்பில் தீர்க்கமான முடிவொன்று எடுக்கப்படும் என்று இந்த கலந்துரையாடலின் போது வடகிழக்கு தமிழ் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி உறுதியளித்தார்.

இதன்போது குறித்த கூட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கருத்து தெரிவிக்கையில், "பொது மக்களின் 3000 ஏக்கர் காணியை கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமித்துள்ளது.

பனாமுரே திலகவன்ச என்ற தேரரே தற்போது அந்த காணியை ஆக்கிரமித்துள்ளார். கடந்த காலங்களில் நியமிக்கப்பட்டிருந்த கிழக்கு தொல்பொருள் பாதுகாப்பு செயலணியின் உறுப்பினராக அந்த தேரர் செயற்பட்டார், "" என சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி , ""அந்த செயலணி தற்போது செயற்பாட்டில் இல்லையல்லவா? அத்தோடு அந்த செயலணிக்கு அரசாங்கத்தின் காணியையோ அல்லது தனியாரின் காணியையோ ஆக்கிரமிக்க முடியாது."" என தெரிவித்தார்.

## எனது பிள்ளையை என்னிடம்...

இது தொடர்பில் ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். எனது மகனை மனச்சாட்சியின் அடிப்படையில் விடுதலை செய்தவர்கள் மீண்டும் மகன் தன்னுடன் வந்து சேர்வதற்கு பிரதமர் மோடி உட்பட அனைத்து தலைவர்களும் வழிவகை செய்ய வேண்டும் எனவும், எனது கண் பார்வை கெட்டு போவதற்கு முன்னதாக மகனை பார்க்க வேண்டும்.

2022 கார்த்திகை மாதம் 11 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்ட எனது மகன் வருவார் என்று எதிர்பார்த்து காத்திருந்த போதிலும் இது வரையிலும் எந்த தொடர்பும் கிடைக்கவில்லை. மகன் இது தொடர்பாக பிரதமர் மோடிக்கு கடிதம் அனுப்பியுள்ளமையை பத்திரிக்கை வாயிலாக அறிந்து கொண்டேன். பிரதமர் மோடி எனக்கு மகன் போன்றவர். நான் அவரிற்கு தாய் போன்றவர். ஆகவே அவர் எனது மகனை என்னுடன் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நான் வாழ போகும் இன்னும் கொஞ்ச நாட்களை எனது பிள்ளையுடன் வாழ ஆசைப்படுகின்றேன். தயவுசெய்து எனது பிள்ளையை என்னிடம் அனுப்பி வையுங்கள்.32 வருடங்களாக எனது பிள்ளையை பிரிந்து வாழ்கின்றேன். மோடி ஐயா மனது வைத்தால் எனது பிள்ளையை என்னுடன் சேர்க்க முடியும். அப்படி நீங்கள் செய்தால் அது பேருதவியாக அமையும்.

நான் இன்னும் கொஞ்ச நாட்களே உயிருடன் இருப்பேன். இங்கிருக்கும் 3 பிள்ளைகளும் எனது உயிரை பிடித்து வைத்துள்ளனர். என்னால் கஷ்டப்படுகின்றனர். அங்கிருக்கும் பிள்ளையோ என்னைப் பார்க்க முடியாது தவிக்கின்றது. பிள்ளை வர போவதாக எல்லா விதமான சாப்பாட்டு பொருட்களையும் வாங்கி வைத்தேன். அவை காலாவதியாகி விட்டன.

உங்களுக்கு அம்மா இருந்தால் சிந்தித்து பாருங்கள். அதை விட மோசமான நிலையிலே நான் உள்ளேன். 32 வருடங்களாக பிள்ளையின் குரலை கேட்கவோ அல்லது முகத்தை பார்க்கவோ இல்லை. பிள்ளையும் அந்த நிலையிலே உள்ளது.

பாவம் செய்த குடும்பமாகவும் வித்தியாசமாக தியாகம் செய்த குடும்பமாகவும் நாம் உள்ளோம். பிள்ளை இங்கு வருகின்ற வேளையில் ஒரு மாதமாவது நான் சமைத்து கொடுக்க வேண்டும். மகனின் குரலை கேட்பதற்காவது ஏதேனும் வழிவகை செய்து தாருங்கள்.

மகனை அலைந்து திரிந்து பார்க்கும் அளவில் எனது உடல் நிலை இல்லை. ஆகவே பிரதமர் மோடி எனது மகனை என்னிடம் சேர்ப்பதற்கு வழி செய்ய வேண்டும் என்பதை மன்றாட்டமாக கேட்டு கொள்கின்றேன் என்றும் உருக்கமான கோரிக்கையை விடுத்துள்ளார்.

## நாட்டில் இனவாத : மதவாத...

குறிப்பிட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற கருத்து மோதல்கள் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் இனவாத, மதவாத மோதல்கள் மீண்டும் உருவெடுக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இனவாதத்தையும், மதவாதத்தையும் தூண்டும் வகையில் மக்களில் ஒரு பகுதியினர் மட்டுமல்ல மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களும் செயற்படுகின்றனர்.

அவர்களின் கருத்துக்கள் நாட்டின் நீதித்துறைக்கு சவால் விடுக்கும் வகையில் அமைந்துள்ளன. அதியுயர் சபையான நாடாளுமன்றத்திலும் சபை விதிமுறைகளை மீறி மக்கள் பிரதிநிதிகள் கூச்சலிடுகின்றனர். இனவாத, மதவாதக் கருத்துக்களை அள்ளி வீசுகின்றனர். நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமெனில், முதலில் மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருந்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## தமிழ் நாடாளுமன்ற உறுப்பி...

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி எதனையும் சாதிக்கலாம் என்று கஜேந்திரகுமார், சாணக்கியன் உள்ளிட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணுகின்றார்கள். இது அவர்களின் அறியாத்தனம். இதற்காக அவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைத்த தமிழ் மக்கள் வெட்கித்தலை குனிய வேண்டும்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்போது பொலிஸாரிடம் சண்டித்தனம் காட்டும் அளவுக்கு துணிவு வந்துள்ளது. அவர்கள் அனைத்து விடயங்களுக்கும் உணர்ச்சி வசப்படாமல் அமைதியாக இருக்க வேண்டும். வெறுமனே வாய்ச்சவிடாலை விடுத்து அமைதியாக இருக்க வேண்டும். இல்லையெனில் அவர்கள் கைது செய்யப்பட்டு பிணை வழங்காமல் சிறையில் தான் தொடர்ந்து அடைத்து வைக்கப்படுவார்கள்.

எனவே முதலில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டம், ஒழுங்கு தொடர்பில் நன்றாகத் தெளிவடைந்திருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## அனைத்துலக சுயநிர்ணய சட்ட...

சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளை கையாளும் விடயத்தில் பொறுமையை இழந்து விட்டோம், தொடர்ந்தும் ஏமாறத் தயார் இல்லை என இரா. சம்பந்தன் சீற்றப்பட்டபோதும், அதேபோல உள்ளூரில் இதற்குரிய தீர்வை சிறிலங்கா அரசாங்கம் வழங்கத் தவறினால் அனைத்துலக சுயநிர்ணய சட்டத்தின் கீழ் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் ஒரு துருப்புச்சீட்டை அடித்த போதும், ரணில் விக்ரமசிங்க அதற்குரிய எதிர் வினைகளை முறையாக வெளிப்படுத்தவில்லை.

மாறாக அடுத்த மாதம் (ஜூலை) இறுதிக்குள் இரண்டு நாட்களுக்கு தொடர்ந்து பேச்சுக்களை நடத்தி முக்கியமான விடயங்களுக்கு தீர்வைக் காண்போம் என அவர் பதில் வழங்கியிருக்கிறார்.

அதற்கு பின்னரும் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு காணும் விடயத்தில் முன்னேற்றங்கள் இல்லாவிட்டால் தன்னை குறை கூறிக் கொள்ளலாம் எனவும் தெரிவித்திருக்கின்றார்.

அத்துடன், சிறிலங்கா படைத்தரப்பிடம் சிக்கியுள்ள காணிகளை தமிழ் மக்களுக்கு மீண்டும் வழங்கும் வகையில் சிறிலங்கா இராணுவ பிரிகேடியர் ஒருவர் தலைமையில் அமைக்கப்படும் பணிமனை ஒன்றுக்கு தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவின் மகனை இணைப்பாளர் என்ற பொறுப்பில் அமர்த்திவிட்டால், பிரச்சினைகள் தீர்ந்து விடுமே என்ற கருத்தையும் அவர் பூடகமாக (கடந்த வாரம் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுடனான பேச்சின் போது) வெளிப்படுத்திக் கொண்டதான செய்திகள் கசிந்துள்ளன.

இதற்கிடையே, தமிழ் மக்களுக்கான தீர்வை சிறிலங்கா வழங்கத் தவறினால் அனைத்துலக சுயநிர்ணய சட்டமன்றத்தின் விடயத்தை இரா சம்பந்தன் தொட்டதும் ராஜபக்ச அதிகார மையத்திற்கு மூக்கில் வியர்வை வருகின்றது.

இதனால் தான் தமிழ் கட்சிகள் அனைத்துலக நாடுகளின் நிகழ்ச்சி நிரலில் நாட்டை குழப்பிக் கொள்ளாமல், உள்நாட்டில் அரசுக்கு நிபந்தனைகளை விதிக்காமல் பேச்சுகளை நடத்தி பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமென மஹிந்த ராஜபக்ச கூறுகிறார்.

ரணில் விக்ரமசிங்க என்று சிறிலங்காவின் முதன்மை தலையாடியாக இருப்பது போல, நாடாளுமன்றத்தில் ஒரு ஆசனத்துடன் இல்லாமல் அதில் பெரும்பான்மை பலத்துடன் இரண்டு தடவைக்கு கொலுவிருந்தவர் மஹிந்த ராஜபக்ச.

அவ்வாறாக சிறிலங்காவின் அதிபராக இருந்த மஹிந்த ராஜபக்ச தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் 18 சுற்று பேச்சுகளை நடத்தினாலும் இறுதியில் தமிழர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

அதே மஹிந்த ராஜபக்ச தான் இப்போது அனைத்துலக நியமங்களின் படி தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரித்துக்கோரும் உரிமை இருப்பதாக பேசுபொருள் ஒன்று வந்தவுடன், தமிழர்கள் அனைத்துலக நிகழ்ச்சி நிரலில் நாட்டை குழப்புவதான விமர்சனத்தை முன்வைத்து சிங்கள மகா ஜனதாவுக்கும் ஒரு மறைமுகமான செய்தியை எறிய தலைப்படுகின்றார்.

ஆக மொத்தம், ராஜபக்சர்கள் இந்த மூக்கு வியர்வைக்கு மத்தியில் கடந்த மே தின உரையில் இந்த வருடத்தின் இறுதிக்குள் இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வு காணப்படும் என தெரிவித்த அதிபர் ரணில் விக்ரமசிங்க இப்போது அதனை இன்னும் முன்னகர்த்த தலைப்படுவதாக தெரிகின்றது

இதனால் தான் அவர் அடுத்த மாத இறுதிக்குள் சில விடயங்களில் தீர்வைக் காண்போம் என கூறத் தலைப்படுகின்றார்.

இதற்கிடையே ரணில் விக்ரமசிங்கவின் நெற்றிக்கு நேரே இரா.சம்பந்தன் சீற்றத்தை வெளிப்படுத்தியதான நகர்வு கூட, சில உள்ளக சிக்கல்களுக்குரிய தற்பாதுகாப்பு ஆயதமாகவும் நோக்கப்படக்கூடும்.

தற்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிளவுபட்டமை யாதார்த்தம். எதிர்வரும் தேர்தலில் தமிழரசுக் கட்சி கடுமையாக உரசப்படலாம் என்ற ஊகங்கள் உள்ளன.

இதற்கிடையே, கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை மையப்படுத்திய சிறிலங்காவின் நகர்வுகளும் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு சில ஆதாயங்களை வழங்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் இரா. சம்பந்தன் தனது தற்காப்பு ஆயுதத்தை தொடுவதாக நோக்கப்படுகிறது.

தேசியம் பத்திரிகையின்
மின்னிதழை பெற
இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில்
இணைந்து கொள்ளுங்கள்..!

SCAN ME

தேசியம் பத்திரிகையில்
உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க
தொடர்பு கொள்ளுங்கள்..!
021 222 7557 / +94 76 567 3339

# சேருவில படுகொலையின் 37ஆவது ஆண்டு நினைவுதினம்

## திருகோணமலை ஈச்சிலம்பற்று - பூநகர் பகுதியில் அனுஷ்டிப்பு!!




முகாம்களில் தஞ்சமடைந்திருந்த மக்களுக்கான உலர் உணவுப் பொதிகளை ஏற்றி வந்த 21பேர் படுகொலை செய்யப்பட்ட திருகோணமலை - சேருவில படுகொலையின் 37ஆவது ஆண்டு நினைவுதினம் திருகோணமலை ஈச்சிலம்பற்று - பூநகர் பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை கடைப்பிடிக்கப்பட்டது.

இதன்போது குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு, மலர்மாலை தூவி தீபமேற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வை குறித்த சம்பவத்தில் உயிரிழுந்தவர்களின் உறவுகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்த மக்களுக்கான உலர் உணவுப்பொருட்களை சேருவில பகுதியில் இருந்து ஈச்சிலம்பற்று நோக்கி எடுத்து வரும்போது மகிந்தபுர பகுதியில் வைத்து மூன்று அரச அதிகாரிகள் உட்பட 21பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள்.

அன்று நாட்டில் நிலவிய யுத்தசூழலின் காரணமாக வெருகல் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்கள் ஈச்சிலம்பற்று, பூமரத்தடிச்சேனை மற்றும் மாவடிச்சேனை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்தார்கள்.

இவர்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் அரசாங்கத்தினால் சேருவில பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக வழங்கப்பட்டு வந்தன.

அந்தவகையில் 1986ஆம் ஆண்டு யூன் மாதம் 12ஆம் திகதி அகதிகளுக்கான நிவாரணங்களை வண்டில்களை கொண்டுவந்து ஏற்றிச் செல்லுமாறு அப்போது மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த வர்ணசூரிய அவர்களினால் மக்களுக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் முகாம்களுக்கு பொறுப்பான அரச அதிகாரிகள் மூவர் உட்பட 21பேர் வண்டில் மாடுகளுடன் சேருவில நோக்கிச் சென்றார்கள்.

அங்கிருந்து நிவாரணப் பொருட்களை ஏற்றிக்கொண்டு ஈச்சிலம்பற்று நோக்கி வரும்போது மகிந்தபுரவில் வைத்து ஆயுதம் தாங்கிய நபர்களினால் இவர்கள் வழிமறிக்கப்பட்டு பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரம் அழைத்துச் செல்லப்பட்டு வெட்டியும், துப்பாக்கியால் சுட்டும் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள்.

இதில் மூன்று அரச அதிகாரிகள் உட்பட 21 பேர் படுகொலை செய்யப்பட்டதோடு மூன்று பேர் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் உயிர் தப்பியிருந்தார்கள்.

# முல்லைத்தீவு வலயத்தில் எழுந்தமானமாக பதியப்படும்

## மாணவர் வரவுப் பதிவு.. கல்வி அதிகாரிகள் தூக்கத்தில்



முல்லைதீவு வலயத்தின் புதுக் குடியிருப்பு கோட்டத்தின் கீழ் உள்ள பாடசாலை ஒன்றில் மாணவர் வரவுப் வதிவேட்டை ஆசிரியர்கள் எழுந்த மானமாகப் பதிந்து வருகின்றமை ஆதாரங்களுடன் அம்பலமாகியுள்ளது.

மாணவர் வரவு பதிவேடு ஆனது பதிவதற்காக முதலாம் பாட வேளையின் முடிவில் 10 நிமிடங்கள் கல்வி அமைச்சின் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

இம்மானவர் பதிவேட்டை ஓர் நிதி ஆவணமாக கையாண்டு நாளாந்த அடிப்படையில் குறித்த வகுப்பாசிரியர் அல்லது ஏனைய ஒரு ஆசிரியரினால் பதியப்பட வேண்டியது அவசியம்.

இருந்தபோதிலும் மேற்குறித்த பாடசாலையில் கடந்த இரண்டாம் மாதம் மாணவி ஒருவர் வண்புணர்வுக்கு உற்படுத்தப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலும் குறித்த மாணவி பாடசாலைக்கு வருகை தந்ததாக அந்நாள் வரவு பதிவேட்டில் வரவு பதியப்பட்டிருந்தது.

மேலும் குறித்த பாடசாலையில் மாணவர் வரவு புத்தகத்தை ஆசிரியர்கள் தான் பயன்படுத்துகிறார்கள் அல்லது மாணவர்களை பயன்படுத்தி இரண்டு மூன்று நாட்களுக்கு ஒரு தடவை பதியப்படுகிறதா என்ற சந்தேகங்கள் எழுகிறது .

இவ்வாறான தவறுகளால் படசாலைக்கு ஒழுங்காக வரும் மாணவர்களை பாதிப்பது மட்டுமில்லாமல் மாணவர்கள் வெளியிடங்களில் முறைகேடான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் வழி வகுக்கும்.

குறித்த விடையம் தொடர்பில் வடமாகாண கல்வி அமைச்சு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பாடசாலை நலன் விரும்பிகள் எதிர்பார்க்கின்றனர்.









# கிருபா லேணர்ஸ்

කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |


## வெளிவரும்

**தேசியம் வாராந்த பத்திரிகையின் விளம்பர விலைப்பட்டியல்**

தேசியம் THESIYAM — NEWSPAPER SIZES, RATE PER EDITION

**WEEKLY NEWSPAPER**

| BLACK & WHITE ADVERTISEMENT | | COLOUR ADVERTISEMENT | |
|---|---|---|---|
| Front Page Top | 2000/= | Front Page Top | 4500/= |
| Front Page Bottom | 4000/= | Front Page Bottom | 6000/= |
| Back Quarter Page | 6000/= | Back Quarter Page | 8000/= |
| Back Half Page | 8000/= | Back Half Page | 10000/= |
| Back Full Page | 12000/= | Back Full Page | 22000/= |
| Inner Quarter Page | 3500/= | Inner Quarter Page | 5000/= |
| Inner Half Page | 6000/= | Inner Half Page | 8000/= |
| Inner Full Page | 10000/= | Inner Full Page | 15000/= |
| Inner Box Ad | 800/= | Inner Box Ad | 1200/= |

Tel : 021 222 7557 | +94 76 567 3339
E-mail : thesiyamnews@gmail.com
Web : www.thesiyamnews.com


**CREATIVE DESIGNER**
every design has a story

Logos | Flyers | Banners | Name Boards | Brochures | Catalogue | Magazines | News Papers | Product Packaging | Social Media Ads | Badges | Menu | Posters | Vouchers

+94 77 3828 594



ONE SHOP STOP FOR ALL YOUR FURNITURE & DECOR NEEDS
BIG SALE! BIG SAVINGS

# மங்களா காட்சியறை

Mangala

யாழின் தளபாட உற்பத்தியாளர்



Furniture | Furnishing | Contemporary Furniture | Ethnic Furniture | Office Furniture | Exquisite Dining Sets | Upholstered Sofas | Outdoor & Lawn Furniture | Leather Recliner | Sheesham Wood Furniture | Ottomans & Chaises | Bedroom Collections | Bunk Beds | Artifacts | Rugs & Carpets | Mattresses & Poufs | Modular Kitchen | Murals & Paintings & etc.

No. 536, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.

TEL : 021 222 8367 | +94 777 286 069




இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.